**செய்தி வெளியீடு எண் : 713** **நாள்: 04.05.2022**

**செய்தி வெளியீடு**

**பொதுப்பணித் துறையின் தலைமைக் கட்டடக் கலைஞர் மற்றும் பொறியாளர்களின் பயன்பாட்டிற்காக ரூ.2.38 கோடி மதிப்பிலான, 7 சீருந்துகள் மற்றும் 22 ஈப்புகள் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (4.5.2022) தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித் துறையின் தலைமைக் கட்டடக் கலைஞர், கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் செயற்பொறியாளர்கள் பயன்பாட்டிற்காக 2 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 7 புதிய சீருந்துகள் மற்றும் 22 புதிய ஈப்புகளை வழங்கிடும் அடையாளமாக 5 வாகனங்களை வழங்கினார்.

2021–2022 ஆம் ஆண்டிற்கான பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கையில், தலைமைக் கட்டடக் கலைஞர், கண்காணிப்புப் பொறியாளர்கள், செயற்பொறியாளர்களுக்கு பழைய வாகனங்களுக்கு பதிலாக புதிய சீருந்துகள் மற்றும் ஈப்புகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதன்படி, 2 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்பட்ட 7 புதிய சீருந்துகள் மற்றும் 22 புதிய ஈப்புகள் ஆகியவற்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொதுப்பணித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப., பொதுப்பணித் துறை முதன்மை தலைமைப் பொறியாளர் திரு இரா.விஸ்வநாத் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in